செ.வெ.எண்: 639

# செய்தி வெளியீடு

நாள்: 06.10.07

**32 பெண் மருத்துவர்களுக்கு பணி நிரந்தர ஆணைகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று ( 06.10.07) தலைமைச் செயலகத்தில் மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் 32 பெண் மருத்துவர்களுக்கு பணி நிரந்தர ஆணைகளை வழங்கினார்கள். சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்கள் மூலம் மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இதற்காக சென்னை மாநகராட்சியில் 93 நகர நலவாழ்வு மையங்கள், 13 குடும்ப நல அறுவை சிகிச்சை நிலையங்கள், 19 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் சைதாப்பேட்டை, பெருமாள்பேட்டையில் 24 மணி நேர அவசர மருத்துவமனை செயல்படுகிறது. 2004ம் ஆண்டு 32 பெண் மருத்துவர்கள் தொகுப்பூதிய முறையில் பணியமர்த்தப்பட்டனர். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பணி நிரந்தரம் ஏற்கப்பட்டு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி தற்போது சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையத்தில் பணிபுரியும் இந்த 32 பெண் மருத்துவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவதுடன், காலமுறை ஊதிய விகிதமான 8000–275–13500 என்ற அடிப்படையில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள். பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ள இந்த மருத்துவர்கள் பிற அரசு மருத்துவர்களைப்போல் அனைத்து பயன்களும் பெறுவார்கள். இந்த பணி நிரந்தர உத்தரவினை பெற்றுக் கொண்ட மருத்துவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும் சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையத்தின் மருத்துவப்பணிக்கு 35 மருத்துவர்கள், 56 செவிலியர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நியமிக்கப்பட உள்ளார்கள். இதனால் அனைத்து மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் மருத்துவர்கள் பணிபுரிவதன் மூலம் பொதுமக்களுக்கு சிறந்த முறையில் பிரசவ கவனிப்பு, குடும்ப நல கருத்தடை சிகிச்சை, கருக்கலைப்பு, குழந்தைகளுக்கு தடுப்பூசி போன்ற முக்கியமான பணிகள் எவ்வித தொய்வின்றி நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.கே.அசோக் வர்தன் ஷெட்டி இ.ஆ.ப., ஆணையர் [illegible] திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., நிலைக்குழுத்தலைவர்(பொது சுகாதாரம்) திரு.அ.மணிவேலன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9